# தலைமைக் கழக அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களுக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, நேற்று (15.09.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவிருந்த "முப்பெரும் விழா" ஒத்திவைக்கப்பட்டது. விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## மணிப்பூரில் பதற்றம் நீட்டிப்பு!


இம்பால், செப்.16–

வெளி மாநிலங்களிலிருந்து பெட்ரோல், டீசல், உணவு பொருட்களை ஏற்றி வரும் லாரிகளை மணிப்பூருக்குள் நுழைய விடாமல் போராட்டக்காரர்கள் தடுத்திருப்பதால், அம்மா நில மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். சரக்குகளை ஏற்றி வந்த லாரி ஓட்டுநர்கள் 10 நாட்களாக நடுரோட்டில் காத்து கிடக்கின்றனர். இதனால் மணிப்பூரில் உச்சக்கட்ட பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. மணிப்பூர் தலைநகர் இம்பாலை நோக்கி செல்பவை. மணிப்பூரின் எல்லையான ஜிரிபாமில் இருந்து இம்பாலுக்குள் நுழையும் தேசிய நெடுஞ்சாலை 37ல் உள்ள நியூ கீதெல்மன்பி என்ற இடத்தில் இவை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

## தந்தை பெரியார் பிறந்த நாள்:

# "சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு"!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



"தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் "சமூகநீதி நாளாக" கடைபிடிக்கப் படும் என்றும்; அப்பிறந்த நாள் அன்று "சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு வகித்தபோது கடந்த 6.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க;

தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2026 அன்று காலை 10.30 மணி அளவில், அந்தந்த மாவட்டக் கழக அலுவலகத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த பின்வரும் "சமூகநீதி நாள் உறுதிமொழி" ஏற்பு நிகழ்ச்சியினை நடத்திட வேண்டுமென அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அன்றையதினம் காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, "சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு" நிகழ்ச்சி நடைபெறும்.

**"சமூக நீதி நாள் உறுதிமொழி"**

- **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அன்பு நெறியும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன்!**
- **சுயமரியாதை ஆளுமைத்திறனும் பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!**
- **சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!**
- **மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!**
- **சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!**

இந்நிகழ்ச்சியில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

**நாள் : 15.09.2026.**

# தமிழ்நாடு முழுவதும் வரலாறுகாணா மின்வெட்டு!

முதல் பக்கத் தொடர்ச்சி



மின் வெட்டை கண்டித்து கிருஷ்ணராயபும் த.வெ.க. பெண் எம்.எல்.ஏ. சத்யாவை பொதுமக்கள் முற்றுகையிட்ட காட்சி!

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாணியம்பாடி பகுதியில் 2 மணி நேரம் மின்தடை ஏற்படுகிறது. இதேபோல விஷமங் கலம் பகுதியில் காலை மற்றும் மாலை நேரங்களில் தலா 1 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகல் மற்றும் இரவு நேரங்களில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது.

**கடலூர்**

கடலூர் வண்ணாரப்பாளையம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒரு மணி நேரமும், சிதம்பரம் பகுதியில் 2 மணி நேரமும் முன்அறிவிப்பு இன்றி மின்தடை ஏற்படுகிறது. அதேபோல் விருத்தாசலம், சிதம்பரம், வடலூர், பண்ருட்டி, சேத்தியாத்தோப்பு மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள கிராம பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. காலையில் 2 மணி நேரமும், இரவில் 2 மணி நேரமும் மின்வெட்டு ஏற்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகவே அடிக்கடி மின் தடை ஏற்பட்டு வருகிறது.

**திண்டுக்கல், தேனி**

திண்டுக்கல் மாவட்டத்தில் தினமும் குறைந்தபட்சம் 7 முறை மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் தினமும் 3 மணி நேரம் மின் வெட்டு ஏற்படுகிறது.

திருச்சி மாநகரில் காலை நேரங்களில் சுமார் 30 நிமிடம் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. மாலை 4 மணிக்கு பின்னரும் அவ்வப்போது மின்தடை செய்யப்படுகிறது.

**எம்.எல்.ஏ. முற்றுகை!**

அரியலூரில் கிராம பகுதிகளில் தான் பெரும்பாலும் மின் தடை உள்ளது. கரூர் மாவட்டத்தில் கிராம பகுதிகளில் பகல் மற்றும் இரவு நேரங்களில் மின்தடை உள்ளது.

தொடர் மின்வெட்டை கண்டித்து நேற்று முன்தினம் சேங்கல் கடைவீதி பகுதியில் அப்பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் ஒன்று கூடி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த வழியாக கிருஷ்ணராயபுரம் த.வெ.க. எம்.எல்.ஏ. சத்யா காரில் வந்தார். அவரை முற்றுகையிட்டு பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

## வீட்டுக்காவலில் சிறை வைத்து

# விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்கும் த.வெ.க. அரசு!

ஈரோடு, செப்.16-

விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்கும் வகையில், பல்வேறு மாவட்டங்களில் விவசாய சங்க நிர்வாகிகளை கைது செய்து, த.வெ.க. அரசு வீட்டுக்காவலில் வைத்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் நடராஜ் தலைமையில் திருச்சியில் நடைபெற உள்ள காத்திருப்பு போராட்டத்திற்கு செல்ல முயன்ற போது சத்தியமங்கலம் போலீசார் நடராஜை கைது செய்தனர்.

அப்போது விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் போலீசார் அவரை வீட்டு காவலில் வைத்தனர். சத்தியமங்கலம் அருகே உள்ள சிவியார்பாளையத்தில் உள்ள அவரது வீட்டில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முழுமையான பயிர்க் கடன் தள்ளுபடி செய்யாத தவெக அரசைக் கண்டித்து திருச்சியில், விவசாயிகள் தொடர் காத்திருப்புப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 45க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் இணைந்து திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே கூட்டுறவு பயிர்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்திட கோரி நேற்று முதல் தொடர் காத்திருப்பு போராட்டத்தை தொடங்கியுள்ளனர். விவசாயிகளின் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதால், தடையை மீறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். திறந்த வெளி மைதானத்தில் பந்தல் அமைப்பதற்கு கூட காவல்துறையினர் அனுமதி அளிக்காததால், சுட்டெரிக்கும் வெயிலில் அமர்ந்து விவசாயிகள், த.வெ.க. அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

## பகுதிச் செயலாளர் வி.சுதாகர் தலைமை!

# மிசா காலக் கொடுமைகள் "நெருப்பாற்றில் நீந்திய காலம்" - எழும்பூர் தெற்கில் கருத்தரங்கம்!

## கி.வீரமணி – திருச்சி சிவா – தோழர் தியாகு உரையாற்றுகின்றனர்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப்.16-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மிசா காலக் கொடுமைகளை "நெருப்பாற்றில் நீந்திய காலம்" எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர் தலைமை தாங்குகிறார்.

திராவிடர் கழக தலைவர் ஆசிரியர்.கி.வீரமணி கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. விடுதலை இயக்க பொது செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இதுகுறித்து மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு வருமாறு :-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மிசா காலக்கொடுமைகளை



நெருப்பாற்றில் நீந்திய காலம் எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் சென்னை எழும்பூர் வேப்பேரி பெரியார் திடலில் 18/9/2026 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் தலைமையில் நடைபெறுகிறது.

இக் கருத்தரங்கில் திராவிட கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி என் சிவா எம்.பி, விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் உரையாற்றுகின்றனர்

மேலும் இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன் தயாநிதி மாறன் எம்பி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி, இரா.கிரிராஜன் எம்பி, ஜோசப் சாமுவேல்,

ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏபி பூர்ணிமா, எஸ் மணி முடி, வே.உமாகாந்த், பி.கே மூர்த்தி, கே எஸ் எம். நாதன், கே சந்துரு, சி. மகேஷ் குமார் மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், ஜி எம் தேவன்,புனிதவதி எத்திராஜன்,

பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு, கூ.பீ. ஜெயின், வே வாசு, ஐசிஎப்.வ.முரளிதரன், எ நாகராஜன், ஜோசப் சாமுவேல், டிஎஸ்பி ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், செ. தமிழ் வேந்தன், எம் சாமி கண்ணு, எஸ் ராஜசேகர் எஸ் முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,கோ மணி, எம் பி உதயசங்கர், சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி. பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ. பாலமுருகன், ஜி ஜே பிரபு, கே வினோத், எஸ். தனசேகர்,நா ரஞ்சித் விஜயாலயன், எல் பி எஃப் மோகன், ஜி தாமோதரன், நா துலுக்கானம், கு கிருஷ்ணமூர்த்தி, ஆர் எஸ் சித்திக், இரா வீரமணி, ம.அசோக் குமார் எம் விநாயகம், சுதா தீனதயாளன் ,ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

## இடைத்தேர்தல்:

# தி.மு.கழக வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம்!

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேட்டி!

சென்னை, செப்.16–

இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வேன் என தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம், சென்னை கோயம்பேட்டில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவில் பொதுச்செயலாளர் பிரேமலதா கலந்து கொண்டு, கட்சியின் கொடியை ஏற்றி வைத்தார். அதனைத்தொடர்ந்து, விஜயகாந்த் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

இடைத்தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சிகள் தனித்து போட்டியிடுவோம் என அறிவித்திருப்பது அவர்களின் கட்சி நிலைப்பாடு. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு நிலைப்பாடு உள்ளது. அது குறித்து எனக்கு எந்த கருத்தும் இல்லை.



எங்களை பொறுத்தவரையில் நாங்கள் அங்கம் வகிக்கும் தி.மு.க. இடைத்தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெறும் என நம்புகிறோம். அதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து உழைப்போம். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இடைத்தேர்தலில் வேட்பாளர்களை அறிவிக்க இருக்கிறோம். உங்களுடைய ஆதரவு வேண்டும் என கேட்டுக்கொண்டார். அப்போது தே.மு.தி.க., தி.மு.க.வுடன்தான் கூட்டணியில் இருக்கும். எங்களின் ஒத்துழைப்பு 100 சதவீதம் உங்களுக்கு இருக்கும் என நான் தெரிவித்தேன்.

இடைத்தேர்தலில் தே.மு.தி.க. சார்பில் தி.மு.க.வுக்கு முழு ஒத்துழைப்பு இருக்கும். பிரச்சாரம் செய்வேன் இடைத்தேர்தலில் நான் பிரச்சாரம் செய்ய இருக்கிறேன். ஒவ்வொரு கட்சியும் அவர்களின் வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என உழைப்பார்கள். ஆனால் அதற்கான முடிவு மக்கள் கையில் உள்ளது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. பரந்தூர் திட்டம் ரத்து, கடற்கரை அருகில் தலைமை செயலகம் அமைய உள்ளதாக தெரிவித்துள்ளனர். இதற்கு பல்வேறு எதிர்ப்புகள் வருகிறது. எனவே, மக்களுக்காக கொண்டு வரும் ஒவ்வொரு திட்டமும் மக்கள் விரும்பும் திட்டமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தா.மோ.அன்பரசன் பங்கேற்பு! மதுராந்தகம் இடைத்தேர்தல்:

# வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம் - சென்னை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 16-

காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர்கள் தா.மோ அன்பரசன் க.சுந்தர் பங்கேற்கிறார். மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து, சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 17.9.2026 வியாழக்கிழமை மாலை 3 மணி அளவில் காஞ்சிபுரம் மாவட்டம் கருங்குழியில் உள்ள முகுந்தன் மஹாலில் நடைபெறும் கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் க.சுந்தர் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள் / முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சி குன்னூர் நகர தி.மு.க. சார்பில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக் தலைமையில் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி ஏற்பாட்டில் கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.